மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காற்றுக் காலங்களில் மண் வந்து மூடுவதைத் தடுக்க முடியாது. கத்தாழை, கொழுஞ்சி போன்ற செடிகளை நட்டு காற்று மண் வந்து பாதையை மூடாமல் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஏதேனும் பாதை மூடப்படுமானல் 'கிரேடர் டோஸர்' வைத்து மணலை அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

ஆரணியாற்றின் குறுக்கே பாலம்

***369 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் அருகில் ஆரணி யாற்றின் குறுக்கே நெடுஞ்சாலையில் அமைக்கப்படும் மேல்நிலைப் பாலத்தின் பணி தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அத்தகைய திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : முன்பு பொறுப்பேற்றுக்கொண்டிருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதை நேரடியாகப் பார்த்து ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். திருப்பதி நெடுஞ்சாலையில் தரைப்பாலத்தில் ஆரணியாற்றில் வெள்ளம் வந்தால் பாதையில் நெருக்கடி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இதை விரைந்து ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு நிதி நிலைமை சரியாக ஆகும் பொழுது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாநெல்லூர் ஏரிக்கருகே அணை

***370 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சாணுபுத்தூரில், மாநெல்லூர் ஏரிக் கழிவுநீர் ஓடையின் குறுக்கே அமையும் அணைக்கட்டுத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டம் என்ன மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : I have no other details.

பாலவாக்கம் ஏரியைச் செப்பனிடுதல்

* 371 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பாலவாக்கம் பொதுப் பணித்துறை ஏரியை SMIP திட்டத்தின் கீழ் சிறப்பாகச் செப்பனிடும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவ்வேலையை துவக்கி விரைவாக முடிக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : இந்த எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் மூலம் நாட்டில் அரசு சார்பில் மிக சிறப்பாக மராமத்து வேலைகள் நடைபெற்றன. அண்மையில் எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் கீழ் பல வேலைகள் எடுத்துக்கொள்ளாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பழைய நிலைமையில் எல்லா திட்டங்களும் அனுமதிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் இந்த வேலையை மட்டும் சொன்னேன். இந்த வேலை சீக்கிரம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும்.

Data Processing Unit

* 372. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to install a data processing unit in the Directorate of Employment and Training in this State : and

(*b*) if so, the functions of the unit?